கரூர் சட்டமன்றத் தொகுதி காதப்பாறை ஊராட்சி, வெண்ணமலை அருள்மிகு பாலசுப்ரமணிய சுவாமி திருக்கோவில் தைப்பூச தேர் திருவிழாவில் மின்சாரம் மதுவிலக்கு ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் வி.செந்தில் பாலாஜி கலந்து கொண்டு, 15,000 பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார்.

திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ் தலைமையில் மாவட்டச் செயலாளர்கள் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ், மாநகராட்சி 4ம் மண்டலத் தலைவர் இல.பத்மநாபன், வடக்கு மாநகர செயலாளர், மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார் ஆகியோர் முன்னிலையில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் சார்பில் திருமண நிதியுதவியுடன் திருமாங்கல்யத்திற்கு தங்கத்தினை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன், மனித வள மேலாண்மைத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணை செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் வழங்கினர். இதில் துணை மேயர் ரா.பாலசுப்பிரமணியம், 2ம் மண்டலத் தலைவர் தம்பி ஆர்.கோவிந்தராஜ், மாவட்ட சமூக நலஅலுவலர் நா.ரஞ்சிதாதேவி, வடக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஈ.தங்கராஜ், முன்னாள் துணை அமைப்பாளர் தம்பி ஷா.அப்துல் ரஹீம் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

பச்சிளம் குழந்தைகள் மரணத்தைத் தடுப்பதில்

தமிழ்நாடு சிறப்பாகச் செயல்படுகிறது!

மாநிலங்களவையில் – டாக்டர் கனிமொழி என்.வி.என்.சோமு கேள்விக்கு ஒன்றிய அமைச்சர் பதில்!

புதுடெல்லி, பிப். 13 -

பச்சிளம் குழந்தைகள் மரணத்தைத் தடுப்பதில் தமிழ்நாடு சிறப்பாக செயல் பட்டுள்ளது என மாநிலங்களவையில் டாக்டர் கனிமொழி என்.வி.என். சோமுவின் கேள்விக்கு ஒன்றிய அமைச்சர் ஜே.பி. நட்டா பதில் அளித்தார்.

இந்தியாவில் பிரசவ கால தாய் சேய் மரணங்கள், பச்சிளம் குழந்தை மரணங்கள் எவ்வளவு? அதைத் தடுக்க, குறைக்க ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன? இந்தியாவில் 16 சதவிகித கர்ப்பிணிப்பெண்களுக்கு எந்தவிதமான ஊட்டச்சத்தும் வழங்கப்படுவதில்லை என்பது உண்மை தானா? என்று மாநிலங்களவையில் தி.மு.க. எம்.பி. டாக்டர் கனிமொழி என்.வி.என். சோமு கேள்வி எழுப்பி இருந்தார்.

இதற்கு ஒன்றிய சுகாதாரத்துறை அமைச்சர் ஜே.பி. நட்டா அளித்த பதில்:

இந்தியாவில், பிரசவ காலத்தில் தாய் இறப்பது தொடர்பான எண்ணிக்கை கடந்த 30 ஆண்டுகளில் 83 சதவிகிதம் குறைந்திருக்கிறது. உலக அளவில் இதே கால கட்டத்தில் 42 சதவிகிதம்தான் குறைந்திருக்கிறது.

பச்சிளம் குழந்தைகள் மரணிக்கும் விகிதமும் இந்தக் காலகட்டத்தில் 65 சதவிகிதம் குறைந்திருக்கிறது. உலக அளவில் இது 51 சதவிகிதமாக இருக்கிறது.

மாநில அரசுகள் மற்றும் யூனியன் பிரதேசங்களுடன் இணைந்து பிரசவ காலம் தொடர்பான, கர்ப்பிணிகள் தொடர்பான விழிப்புணர்வு முகாம்களை ஒன்றிய அரசு நாடு முழுக்க நடத்துகிறது. குறிப்பாக மாதத்தில் ஒருநாள் கிராமப் புற பகுதிகளில் விழிப்புணர்வு முகாம் நடத்துவது, சுகாதார மேளாக்கள் நடத்துவது, ஊட்டச்சத்து இலவசமாக வழங்குவது மற்றும் அது தொடர்பான ஆலோசனை வழங்குவது, குழந்தையின்மை தொடர்பான சிகிச்சைகளுக்கு ஆலோசனை வழங்கும் முகாம்கள் நடத்துவது, நடமாடும் சுகாதார மையங்களை கிராமப் புறங்களில் பயன்படுத்துவது போன்ற நடவடிக்கைகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுகின்றன.

இதுதவிர பிரசவ காலத்தைக் கடக்கும் பெண்களின் நலனுக்காக பிரதமரின் பெயரில் அமைந்த திட்டத்தின் கீழ் ஒவ்வொரு மாதம் 9ம் தேதி இலவச சிகிச்சை மற்றும் மருத்துவ ஆலோசனைகள் வழங்கும் திட்டமும் அமலில் இருக்கிறது. இதற்காக 2021-22 ம் ஆண்டு 9 கோடி ரூபாயும், 2022-23 ம் ஆண்டில் 42 கோடி ரூபாயும், 2023-24ம் ஆண்டில் 83 கோடி ரூபாயும் செலவிடப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் கடந்த மூன்றாண்டுகளில் முறையே 3.46 லட்சம்; 3.29 லட்சம்; 3.31 லட்சம் கர்ப்பிணிப் பெண்கள் பயனடைந்திருக்கிறார்கள்.

இவ்வாறு அமைச்சர் ஜே.பி. நட்டா பதிலளித்தார். இந்த பதிலுடன் அவர் இணைத்துள்ள விப ரங்களின் அடிப்படையில்,

தமிழகத்தைப் பொறுத்தவரை, ஒரு லட்சம் கர்ப்பிணிகளில் 54 பேர் மரணிக்கிறார்கள் என்று தரவுகள் சொல்கிறது. பிரசவ காலத்தில் தாய் மரணிக்கும் நிகழ்வை குறைவாக வைத்திருக்கும் பெரிய மாநிலங்களில் தமிழ்நாடு மூன்றாவது சிறந்த மாநிலமாகத் திகழ்கிறது.

அதேபோல பிரசவ காலத்தில் குழந்தைகள் இறப்பது தமிழகத்தில் ஆயிரம் பேருக்கு இரண்டு என்ற அளவிலேயே இருக்கிறது. பச்சிளம் குழந்தைகள் மரணிப்பதில் பெரிய மாநிலங்களைப் பொறுத்தவரை ஆயிரம் குழந்தைகளில் 9 பேர் என்ற குறைந்த எண்ணிக்கையைப் பதிவு செய்து சிறப்பாக செயல்பட்டு தமிழ்நாடு முதன்மை மாநிலமாக இருக்கிறது.

இவ்வாறு ஒன்றிய அமைச்சர் குறிப்பிட்டார்.

பொறுப்பு அமைச்சர் மு.பெ. சாமிநாதன் தலைமையில்

உதகை சட்டமன்றத் தொகுதி கழக நிர்வாகிகள் கூட்டம்!

மாவட்டச் செயலாளர் பா.மு.முபாரக் அறிவிப்பு!

நீலகிரி, பிப். 13-

நீலகிரி மாவட்டம், உதகை சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட தி.மு.க. நிர்வாகிகள் கூட்டம் மாவட்டப் பொறுப்பு அமைச்சர், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தலைமையில் மாவட்டக் கழக அலுவலகம், உதகை கலைஞர் அறிவாலயத்தில் இன்று

(13.2.2025 வியாழக்கிழமை) மதியம் 2 மணியளவில் அரசு கொறடா கா.ராமச்சந்திரன் முன்னிலையில் நடைபெற உள்ளது.

மாவட்டக் கழகச் செயலாளர் பா.மு.முபாரக் வரவேற்புரையாற்ற உள்ளார்.

கூட்டத்தில், கழக வளர்ச்சிப் பணிகள் குறித்து ஆலோசிக்கப்பட உள்ளது.

மேற்படி கூட்டத்தில் உதகை சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழுபொதுக் குழு உறுப்பினர்கள், நகர, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள், அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், நகராட்சி, பேரூராட்சி தலைவர்கள் உள்ளிட்ட அனைவரும் தவறாமல் கலந்து சிறப்பிக்க வேண்டுகிறேன்.

இவ்வா மாவட்டக் கழகச் செயலாளர் ப.மு.முபாரக் தெரிவித்துள்ளார்.

திருவாலங்காட்டில் புதிய கட்டிடம் திறப்பு!

திருவள்ளூர், பிப். 13–

திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி தொகுதிக்கு உட்பட்ட திருவாலங்காடு ஒன்றியம் தாழ வேடு ஊராட்சிக்கு உட்பட்ட தும்பி குளம் கிராமத்தில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் ரூபாய் 41 லட்சம் மதிப்பீட்டில் கட்டுமான பணியை திருவள்ளூர் மேற்கு மாவட்டச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன், எம்.எல்.ஏ. கலந்து கொண்டு தொடங்கி வைத்தார். உடன் திருவலாங்காடு மேற்கு ஒன்றிய செயலாளர் கூஸூர் எம். ராஜேந்திரன், ஒன்றிய நிர்வாகிகள் ஜெயராமன், கோபி, காஞ்சி பாடி பி.சரவணன், கமலநாதன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

புதுக்கோட்டை மாவட்டம் திருமயத்தில்

புதிய கலையரங்கம், சுற்றுச்சுவர் - மின்மாற்றி!

சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி திறந்து வைத்தார்!

புதுக்கோட்டை, பிப்.13 -

புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற நூற்றாண்டு விழாவில், புதிய கலையரங்கம், சுற்றுச்சுவரினையும் மற்றும் திருமயம் அரசு மருத்துவமனை வளாகத்தில், 11 கி.வாட் திறன் கொண்ட புதிய மின்மாற்றியினையும், சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத் துறை அமைச்சர் எஸ். ரகுபதி 05.02.2025 அன்று திறந்து வைத்தார்.

பின்னர் அமைச்சர் தெரிவித்ததாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாணாக்கர்களின் கல்வி நலனில் மிகுந்த அக்கறை கொண்டு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில், பள்ளிகளின் உட்கட்டமைப்புகளை மேம்படுத்துதல், மாணவர்களின் கல்வித்திறன்களை அதிகரித்தல் உள்ளிட்ட பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன்படி திருமயத்தில், புதிய கலையரங்கம், சுற்றுச்சுவர் மற்றும் மின்மாற்றி திறந்து வைக்கப்பட்டது.

அதன் அடிப்படையில், திருமயம் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.7 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள கலையரங்கம் கட்டடத்தினையும் மற்றும் ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி திட்டத்தின்கீழ் ரூ.15 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள சுற்றுச்சுவரினையும் திறந்து வைக்கப்பட்டது. மேலும், திருமயம் அரசு மருத்துவமனை வளாகத்தில், 11 கி.வாட் திறன் கொண்ட புதிய மின்மாற்றி திறந்து வைக்கப்பட்டதன் மூலம் இப்பகுதிக்கு நிறைவான மின் அழுத்தம் வழங்கப்படும்.

எனவே, தமிழக அரசின் மூலம் செயல்படுத்தப்படும் இதுபோன்ற திட்டங்களை அனைவரும் உரிய முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் எனவும் அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சிகளில், புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் செல்வி. பா.ஐஸ்வர்யா, முதன்மைக் கல்வி அலுவலர் கூ.சண்முகம், செயற்பொறியாளர் (மின்சார வாரியம்) எம். ஆனந்தாய், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ராம. சுப்புராம், புதுக்கோட்டை மாவட்ட கல்வி அலுவலர் ரமேஷ், பள்ளித்துணை ஆய்வாளர் குருமாரிமுத்து, தலைமை ஆசிரியர் வி.தாமஸ் ராஜ்குமார், அ.சுப்பிரமணியன், அழகு சிதம்பரம், எம்.பி.சரவணன், இரா. மேகநாதன், தேவி, சுப. துரைராஜா சாமி சுரேஷ், ரமேஷ் சிக்கந்தர், அண்ணாத்துரை, முல்லை ரமேஷ் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

பொது விநியோக முறையை

டிஜிட்டல் மயமாக்க ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாநிலங்களவையில் எம்.எம்.அப்துல்லா கேள்வி!

புதுடெல்லி, பிப்.13-

பொது விநியோக முறையை டிஜிட்டல் மயமாக்கிட ஒன்றிய அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது? எம்.எம்.அப்துல்லா மாநிலங்களவையில் கேள்வி எழுப்பினார்.

அதில் "பொது விநியோக முறையை டிஜிட்டல் மயமாக்கிட ஒன்றிய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன?, போலி ரேஷன் கார்டுகளை அகற்ற எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன? பிரதான் மந்திரி கரிப் கல்யாண் அன்ன யோஜனா நலத்திட்டத்தில் தகுதியான பயனாளிகள் மட்டுமே சேர்க்கப்படுவதை உறுதி செய்ய எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன மற்றும் பொது விநியோக முறைமையில் வெளிப்படைத்தன்மை உறுதி செய்யப்படுகிறதா?" என்றும் கேள்விகளை எழுப்பினார்.

அதற்கு பதிலளித்த இந்திய ஒன்றிய நுகர்வோர் விவகாரங்கள்,உணவு மற்றும் பொது விநியோகத்துறை இணையமைச்சர் திருமதி. நிமுபென் ஜெயந்தி பாய் பாம்பானியா "பொது விநியோகத் திட்டத்தில் செயல்திறனை மேம்படுத்தவும், போலிகளைக் குறைக்கவும், தொழில்நுட்பத்தால் இயக்கப்படும் பொது விநியோகத் திட்ட சீர்திருத்தங்களின் ஒரு பகுதியாக, அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களிலும் ரேஷன் அட்டைகள் மற்றும் பயனாளிகளின் தரவுத்தளம் முழுமையாக 100 சதவிகிதம் டிஜிட்டல் மயமாக்கப்பட்டுள்ளது. அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களிலும் வெளிப்படைத்தன்மை கொண்ட ஆன்லைன் குறை தீர்க்கும் வசதி மற்றும் கட்டணமில்லா எண் செயல்படுத்தப்பட்டுள்ளன. மேலும், அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களி லும் ஆன்லைன் ஒதுக்கீடு செயல்படுத்தப்பட்டு விநியோகச் சங்கிலி கணினிமயமாக்கப்பட்டுள்ளது.

பொது விநியோக முறையை டிஜிட்டல் மயமாக்குவதன் முக்கிய நோக்கங்கள், விநியோக செயல்பாட்டில் செயல்திறன் மற்றும் வெளிப்படைத்தன்மையை மேம்படுத்துவது, உணவு தானியங்களைப் பாதுகாப்பது போன்ற பல்வேறு சவால்களை எதிர்கொள்வதும் ஆகும். 2013 முதல் பொது விநியோக முறையில் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி ரேஷன் கார்டுகள்/பயனாளிகளின் தரவுத்தளங்களை டிஜிட்டல் மயமாக்குதல், ஆதார் இணைப்பு, நகல் நீக்க செயல்முறை, நகல்களை அடையாளம் காணுதல், தகுதியற்ற பதிவுகள், இறப்புகள், பயனாளிகளின் நிரந்தர இடம்பெயர்வு போன்றவை மேற்கொள்ளப்பட்டுள்ளன. பிரதான் மந்

திரி கரிப் கல்யாண் அன்ன யோஜனா திட்டத்தின் கீழ் சரியான இலக்கை அடைவதற்காக, அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களிலும் 2013 முதல் 2024 வரை சுமார் 5.87 கோடி ரேஷன் கார்டுகள் அகற்றபட்டுள்ளது. மொத்தமுள்ள 5.43 லட்சம் நியாய விலைக் கடைகளில் 5.41 லட்சம் (99.6%) கடைகள், பொது விநியோக முறையின் கீழ் பயனாளிகளின் பயோமெட்ரிக்/ஆதார் அங்கீகாரம் மூலம் மின்னணு முறையில் தானியங்கி மயமாக்கப்பட்டுள்ளன" என்று தெரிவித்தார்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

குளித்தலை கை. அங்கமுத்து

பிப்ரவரி 13 (2014)

தலைவர் கலைஞர் அவர்கள் முதன்முறையாக சட்டமன்ற உறுப்பினராக குளித்தலை தொகுதியில் போட்டியிட்டபோது, குளித்தலை நகரக் கழகச் செயலாளராக பொறுப்பேற்றிருந்த இவர், தலைவர் அவர்களின் வெற்றிக்காக பாடுபட்டவர்.

கல்லக்குடி போராட்டத்தின்போது குளித்தலையில் கைதாகி, தலைவர் அவர்களுடன் திருச்சி மத்திய சிறையில் இருந்ததோடு, 'நங்கவரம்' போராட்டத்திலும் தலைவர் அவர்களுடன் கலந்து கொண்டவர். அத்துடன் கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்றவர்.

"மொழிப்போரில் பங்கேற்றது தனது கடமை" என்று சொல்லி, மொழிப்போர் தியாகிகளுக்கு அரசால் வழங்கப்படும் உதவித் தொகையை பெற்றுக் கொள்ளாமல் மறுத்தவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

நாச்சியார்கோவில் தி. இராமலிங்கம்

பிப்ரவரி 13 (2009)



பேரறிஞர் அண்ணா – தலைவர் கலைஞர் ஆகியோரின் பேச்சினாலும் – கொள்கையினாலும் ஈர்க்கப்பட்டு, கழகம் துவக்க காலத்திலே உறுப்பினராகி, கழகப் பணியாற்றி வந்த இவர், தொடர்ந்து 48 ஆண்டுகளாக நாச்சியார்கோவில் கிளைக் கழகச் செயலாளராக பொறுப்பு வகித்து அப்பகுதியில் கழகம் வளர பாடுபட்டவர்.

மன்னை நாராயணசாமி, கே.கே.நீலமேகம் மற்றும் ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டக் கழக முன்னோடிகளுடன் இணைந்து பணியாற்றியவர்.

இந்தி எதிர்ப்புப் போராட்டம் போன்ற கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர். குறிப்பாக,நெருக்கடிகாலத்தில் மிசா கைதியாக சிறையில் இருந்தவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.